**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2014**

**P102 உரைநடையும் நாடகமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. 'உரை முதல்வர்' என்று சிறப்பிக்கப் பெறும் உரையாசிரியர் யார்?
2. பாரதியாரின் வசன கவிதைக்கு எடுத்துக்காட்டாக அமைந்த கவிதை எதைப் பற்றியது?
3. தொகை நூல்களில் முதலில் தொகுக்கப்பெற்றதென உ.வே.சா. எதனைக் குறிப்பிடுகின்றார்?
4. இருபதாம் நூற்றாண்டில் தனித்தமிழ் வழக்கினை உயிர்ப்பித்தவர் யார்?
5. உரைநடை இலக்கிய வடிவத்தின் தந்தை எனப் போற்றப்பெறுபவர் யார்?

6. "பட்டு உடுத்தினால் பகட்டு; நகை போட்டால் நளினம்" இவ்வுரைவீச்சு யாருடையது?
7. 'செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை' என்று பாராட்டியவர் யார்?
8. அண்ணா தன் ஏக்கங்களையும் கற்பனைகளையும் எடுத்துரைக்க எதைப் பயன்படுத்தினார்?
9. சொல்லாக்கம் என்றால் என்ன?
10. கண்ணதாசன் தன் திரைப்படப் பாடல்களில் எவற்றை அமைத்துப் பாடினார்?
11. சிறுமிதம் என்ற புதிய சொல்லை உருவாக்கியவர் யார்?
12. நாடகம் என்பதைப் பிரித்துக் காட்டுக.
13. கலையுலக பிரம்மா என்றழைக்கப் பெற்ற நாடக ஆசிரியர் யார்?
14. சிறுவர் நாடகங்களில் இருக்க வேண்டியவை எவை?
15. அண்ணாவைப் பெர்னாட்சா என்று பாராட்டியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. திருக்குறளுக்கு எழுதப்பட்ட உரைகள் யாவை? பரிமேலழகரின் உரைச் சிறப்பைச் சான்றுடன் விளக்குக.
2. அளவை உரைநடை என்றால் என்ன?
3. அண்ணாவின் உரைநடையின் தனித்தன்மைகள் யாவை?
4. பாவாணர் எழுதியவற்றுள் நான்கு நூல்களைக் குறிப்பிடுக.
5. திரைக்கதை என்பதை விளக்கி, ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
6. சமூக நாடக உரையாடலுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
7. மனோகரா நாடகம் – சிறு குறிப்புத் தருக.
8. மனோன்மணீயம் நாடகத்தின் சிறப்புகளாக எவற்றைக் குறிக்கலாம்?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) விளக்க உரைநடை என்றால் என்ன? அதற்கு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) உ.வே.சா. பதிப்பித்த நூல்கள் யாவை? அவற்றைப் பற்றிய செய்திகளைத் தொகுத்தெழுதுக.

2. (அ) தமிழ் உரைநடைக்கு அண்ணா அளித்த பங்களிப்பைக் குறித்து ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) தென்திராவிட மொழிகளில் நாடகம் தோற்றம் பெற்றது எவ்வாறு? விவரிக்க.

3. (அ) பாவாணரின் உரைநடைச் சிறப்பியல்புகள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) மு.வரதராசனாரின் வாழ்வும் பணியும் குறித்து எழுதுக.